## சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

## OS. No.10 /2019

## 04.08.2025

## P.W.1- பார்வதி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2 முதல் 4 மற்றும் 13 முதல் 15 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனது வீட்டுக்காரர் பெயர் தர்மர். எனது கணவரின் அப்பா பெயர் ராசுத்தேவர். மேற்படி ராசுத்தேவருக்கு முத்துக்கண்ணன், பாண்டியன், செல்லம்மாள், ரங்கராஜ், எனது கணவர் தர்மர், மணியம்மாள், கணேசன், முருகன், அமுதா ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படியார்களில் முத்துக்கண்ணன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 1வது பிரதிவாதி முத்துக்கண்ணத்தேவரின் மனைவி என்றால் சரிதான். இளங்கோவன், சாந்தி, ரவிச்சந்திரன் ஆகியோர்கள் 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் என்றால் சரிதான். செல்லம்மாள் மற்றும் அவரின் வாரிசுகளை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது மாமனார் ராசுத்தேவர்,மாயாண்டித்தேவர் மகன் ஒச்சாத்தேவரிடமும், அவரது மைனர் வாரிசுகளிடமும் இருந்து கடந்த 20.08.1956ல் உசிலம்பட்டி கிராம சர்வே எண்.334/6ல் ஏக்கர் 4 சென்டு 93ல் 1 ஏக்கர் 35 சென்டு கிரையம் வாங்கினார் என்றால் தெரியாது. எனது மாமனார் ராசுத்தேவர் கடந்த 23.10.1982ல் குருநாதபிள்ளை மகன் ராஜுப்பிள்ளை என்பவரிடமிருந்து சர்வே எண்.333/1ஏல் ஏக்கர் 24 சென்டு 96ல் கீழ்புறம் சென்டு 30ம், சர்வே எண்.334/6ல் ஏக்கர் 4 சென்டு 93ல் வடபுறம் சென்று 17ம், சர்வே எண்.333/1ஏ-யில் ஏக்கர் 24 சென்டு 96ல் வடபுறம் சென்டு 18ம், மேற்படி பாகத்தில் என் பாகம் 1/5 பாகமும், அதில் அமைந்துள்ள இரண்டு கமலைகளில் வடபுறத்து கிழக்கு பார்த்த கமலை வாரியில் 5ல் ஒரு பாகம் கிரையம் வாங்கினார் என்றால் தெரியாது. மேற்படி சொத்துக்களில் உள்ள கிணற்றின் மின் இணைப்பு எனது கணவர் பெயரில் உள்ளது என்றால் தெரியாது. மேற்படி சொத்துக்களை எனது கணவருக்கும், எனது கணவருடன் பிறந்த பாண்டியனுக்கும் பாகமாக

ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது மாமனார் கிரையம் வாங்கிய சொத்துக்களை தாவா வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. ராசுத்தேவர் உயிருடன் இருக்கும்போது யாருக்கும் கிரையம் கொடுக்கவில்லை என்றால் தெரியாது. பேரையூர் ரோட்டில் உள்ள கடையினை எனது மாமனார் தான் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். மேற்படி கடையுள்ள சொத்தை 02.09.1992ல் பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி பாகப்பிரிவினையானது ராசுத்தேவரின் மக்கள் முத்துக்கண்ணத்தேவர், பாண்டியன், தங்கராஜ், எனது வீட்டுக்காரர் தர்மர், கணேசன், முருகன் ஆகியோர்களில் 1, 2 மற்றும் 4, 5, 6 நபர்கள் ஏ பார்ட்டியாகவும், 3வது நபர் பி பார்ட்டியாக இருந்து பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் தெரியாது. எனது கணவர் 31.12.1994ம் தேதி இறந்துவிட்டார். எனக்கு பாகமாக கிடைத்த கடையை நான் கிரையம் கொடுத்தேன் என்றால் எல்லோரும் சேர்ந்து தான் கிரையம் கொடுத்தோம். அதில் தங்கராஜ் அவருக்கு பாகமாக கிடைத்த சொத்தை கிரையம் கொடுக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. மேற்படி கிரைய ஆவணத்தில் ஏ பார்ட்டி, பி பார்ட்டி பாகம் செய்ததாக குறிப்பிட்டு தான் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு கிரையம் கொடுத்த விவரத்தை பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. எனது மாமனார் ராசுத்தேவர் கிரையம் பெற்ற சொத்துக்கள் தோட்டமாக இன்று வரை இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி தோட்டமானது எனது கணவருக்கும், பாண்டியனுக்கும் பாகமாக கிடைத்தது என்றால் கிடைக்கவில்லை. மேற்படி சொத்துக்கள் எனது கணவருக்கும், பாண்டியனுக்கும் பாகமாக கிடைத்த காரணத்தினால் தாவா சொத்துக்களில் மேற்படி சொத்துக்களை காட்டாமல் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. முத்துக்கண்ணுத்தேவர் என்பவருக்கு பாகமாக கிடைத்த சொத்துக்களை அவரது மனைவி ஜோதியம்மாள், அவரது மகனான இளங்கோவனின் மனைவி மஞ்சுளா, ஜோதியம்மாள் மகள் சாந்தி, முத்துக்கண்ணுத்தேவரின் மகன் ரவிச்சந்திரன் ஆகியோர்கள் அவர்களுக்கு பாகமாக கிடைத்த சொத்துக்களை 12.07.2010ல் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் தெரியாது. மேற்படி பாகப்பத்திரத்தில் மேல்புறம் 29 சென்டு மஞ்சுளாவிற்கும், நடுமையம் 29 சென்டு

சாந்திக்கும், கிழ்புறம் 29 சென்டு ரவிச்சந்திரனுக்கு பாகம் கிடைத்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் தெரியாது. ரவிச்சந்திரனுக்கு பாகமாக கிடைத்த சொத்தை 24.04.2023ல் ரவிச்சந்திரனும், அவரது வாரிசுகளும் பணபாண்டி என்பவருக்கு சென்டு 4யை பொறுத்து கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் தெரியாது. மேலும் ரவிச்சந்திரனும், அவரது வாரிசுகளும் 15.05.2024ல் அய்யம்மாள் என்பவருக்கு சென்று 3யை பொறுத்து கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால் தெரியாது. ரவிச்சந்திரனும், அவரது வாரிசுகளும் கடந்த 24.07.2024ல் பவித்ரா என்பவருக்கு சென்டு 3யை பொறுத்து கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் தெரியாது. ரவிச்சந்திரனும், அவரது வாரிசுகளும் அவர்களுக்கு பாகமாக கிடைத்த சொத்துக்களை கடந்த 30.05.2025ல் ஜெயபிரகாசம், நதிதேவி ஆகியோர்களுக்கு 2700 சதுர அடியை கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் தெரியாது. மேற்படி முருகன் அவருக்கு கிடைத்த பாக சொத்தை கடந்த 10.07.1996ல் மோகன், பஞ்சு ஆகியோர்களுக்கு சென்டு 3யை பொறுத்து கிரையம் கொடுத்தார் என்றால் வழக்கு போட்ட பிறகு தெரியவந்ததால் அவர்களை பிரதிவாதிகளாக சேர்த்தேன். முருகன் அவருக்கு பாகமாக கிடைத்த சொத்தினை 08.09.1997ல் சீனித்தேவர் மகன் ராஜேந்திரன் என்பவருக்கு சென்டு 5யை பொறுத்து கிரையம் செய்து கொடுத்தார் என்றால் வழக்கு போட்ட பிறகு கிரையம் கொடுத்துள்ளார். வழக்கு 2010ல் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். ஆனால் முருகன் என்பவர் அவருக்கு 1996, 1997ல் கிரையம் கொடுத்தார் என்றால் அப்போது எனக்கு தெரியவரவில்லை. முருகன் பதில் வழக்குரை தாக்கல் செய்த பிறகு தான் அவர் கிரையம் கொடுத்த விவரம் தெரியும். அதன்பிறகு தான் அவர்களை தரப்பினர்களாக வழக்கில் சேர்த்தேன். பேரையூர் ரோட்டில் எனக்கு வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீடு அமைந்துள்ள சொத்தை வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் வழக்கில் சேர்த்துள்ளேன். நான் வழக்குரை சொத்து விவரத்திலும், நிரூபண வாக்குமூலத்தில் வீடு எந்த புல எண்ணில் கட்டுப்பட்டுள்ளது என்று தெளிவாக கூறவில்லை என்றால் சரிதான். மேற்படி முருகன் 2017ல் இறந்துவிட்டார். அவரது மனைவி பெயர் சகுந்தலா என்றால் சரிதான். மேற்படி சகுந்தலா முருகனுக்கு பாத்தியப்பட்ட சொத்தை பால்கண்ணன் மகன் வீரணன் என்பவருக்கு 27.11.2024ல் சென்டு 36யை பொறுத்து கிரையம் கொடுத்தார்

என்றால் தெரியாது. தாவா சொத்துக்கள் எங்களுக்கோ, எனது மச்சான் பாண்டியனுக்கோ எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு கட்டுப்படாத எனது மாமனாருக்கு கிரைய பாத்தியப்பட்ட சொத்துக்களை எனது கணவருக்கும், பாண்டியனுக்கும் பாகமாக கிடைத்த சொத்துக்களை இன்றுவரை அனுபவம் செய்துவிட்டு அந்த சொத்துக்களை வழக்கில் காட்டாமல் பிரதிவாதிகளுக்கு பாகமாக கிடைத்த சொத்துக்களை மட்டுமே பாகமாக கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. ராசுத்தேவர் கிரையம் பெற்ற சொத்துக்கள் பாதையில்லாமலும், போதிய விலைக்கு போகாத சொத்துக்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பேரையூர் ரோட்டிற்கு மேற்கேயுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் முத்துக்கண்ணுத்தேவர், கணேசன், முருகன் ஆகியோர்களுக்கு பாகமாக கிடைத்து என்றால் சரியல்ல. தங்கராஜ் என்பவருக்கு பேரையூர் ரோட்டில் உள்ள கடையை பாகமாக கொடுத்ததால் தாவா சொத்துக்களில் பாகம் ஒதுக்கவில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் மேற்படி தங்கராஜ் வாரிசுகள் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**16, 17 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

தங்கராஜ் எனது கணவரின் அண்ணன் ஆவார். அவர் இறந்துவிட்டதால் அவருடைய பிள்ளைகளை 16, 17வது பிரதிவாதிகளாக வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். 5, 6, 8 அயிட்ட சொத்துக்கள் முத்துக்கண்ணன் என்பவருக்கு பாகமா கிடைத்து என்றாலும், அவர் மேற்படி சொத்துக்களை சாந்தி என்பவருக்கு கடந்த 21.10.1998ல் கிரையம் செய்து கொடுத்தார் என்றால் தெரியாது. மேற்படி முத்துக்கண்ணுத்தேவர் 28.03.2001ல் அவருக்கு பாகமாக கிடைத்த சொத்துக்களில் மனோகரன் மனைவி சத்யா என்பவருக்கு ஈடு எழுதிக்கொடுத்தார் என்றால் தெரியாது. தங்கராஜுக்கு பாகமாக ஏதேனும் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டதா என்றால் சொத்துக்கள் பாகமாகவில்லை. கணேசனுக்கு எந்தெந்த சொத்துக்கள் பாகமாக கிடைத்தது என பிராதில் சொல்லவில்லை என்றால் சொத்துக்கள் பாகமாகவில்லை. நீதிமன்றம் வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் ஏற்பட்ட பிரச்சினையில் ஏற்கனவே பாகம் அவர்களுக்குள் பிரித்துக்கொண்டார்கள் என்றும், அவ்வாறு

பிரிக்கப்படவில்லை என்று நீதிமன்றம் கருதினால் இறந்துபோன கணேசன் வாரிசு இல்லாமல் இறந்ததால் 5ம் பிரதிவாதிக்கு 1/8 பாகத்தை ஒதுக்க வேண்டும் என்றால் எனக்கு தெரியாது.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.08.04 17:35:15 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.